Registered as a Newspaper in Ceylon * * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தந்தி விலாசம் எண் : 49
போன் 689

National Tamil Daily

மலர் 9
இதழ் 123
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க வைகாசி 31 ரபிஅவ் 5 புதன்கிழமை [14-6-67]

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
றப்பர் வளையல்
நவீன முத்துமாலை
முடிமயிர்
ஜீவா பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# இந்திய ராஜதந்திரியை சீனா நாடுகடத்த முடிவு

## பகிரங்க விசாரணை முயற்சி கைவிடப்பட்டது

## மற்றொரு அதிகாரி 'விரும்பத்தகாதவர்' என அறிவிப்பு

புதுடில்லி, ஜூன் 13

பீகிங்கிலுள்ள இந்தியத் தூதரக இரண்டாவது காரியதரிசி திரு. ரகுநாத்தை நாடுகடத்துவதற்கு சீன அரசாங்கம் முடிவுசெய்திருக்கின்றது. உளவு பார்த்ததாக இவர் மீது சீனா குற்றஞ்சாட்டியுள்ளது,

இந்திய தூதரகத்தின் மூன்றாவது காரியதரிசி விஜை என்பவரை விரும்பத்தகாத நபர் என்று சீனா அறிவித்திருக்கின்றது.


சீன அரசாங்கத்தின் இந்த முடிவு இன்று சீனாவிலுள்ள இந்தியத் தூதரிடம் அறிவிக்கப்பட்டது.

திரு. ரகுநாத்தும் விஜையும் உளவு பார்த்த குற்றச்சாட்டுகளில் குற்றவாளிகளாகக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக இன்று சீன வெளியுறவு அமைச்சு இந்தியத் தூதரைச் சந்தித்துத் தெரிவித்தது. திரு. ரகுநாத் சீன அரசாங்க அதிகாரிகளால் நாட்டைவிட்டு வெளியேற்றப்படுவார் என்றும் திரு. விஜை மூன்று நாட்களில் நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

முன்னர் இந்த இரண்டு இந்திய அதிகாரிகளும் பகிரங்கமாக விசாரிக்கப்பட வேண்டும் என்று செங்காவலர்கள் கோரியிருந்தனர். திரு. ரகுநாத்தை பகிரங்க விசாரணைக்கு வருமாறு சீன அரசாங்கமும் உத்தரவிட்டிருந்தது.

இந்திய ராஜதந்திர அதிகாரிகளை பகிரங்க விசாரணைக்குட்படுத்துவதை இந்திய அரசாங்கம் பலமாக ஆட்சேபித்திருந்தது. சர்வ

[6-ம் பக்கம்பார்க்க]



யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சேக்கிழார் விழாவில் கலந்துகொள்வதற்காக இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள தருமைஆதீன தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் பலாலி விமானநிலையத்தில் நேற்று மாலை வரவேற்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம். சேக்கிழார் மன்றத் தலைவர் திரு. எம். ஸ்ரீகாந்தா, நல்லை ஆதீன சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் ஆகியவர்களும் படத்தில் காணப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில்

## இரு இரவில் 109 வாலிபர் கைது

யாழ்ப்பாணம், புதன்

இரு இரவில் 109 வாலிபர்கள் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்கள். இச்சம்பவம் நேற்றும் முன்தினமிரவும் நடைபெற்றது.

வெளிச்சம் இன்றியும், இருவராகவும் வீதிகளில் சைக்கிள் ஓடியதாகவும், சந்திகளிலும் வீதி ஓரங்களிலும் கூட்டமாக நின்று வீதியால் செல்லும் பெண்களை நையாண்டி செய்ததாகவும் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டதைத்தொடர்ந்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுடைய சைக்கிள்களும் பொலிஸ் பாதுகாப்பில வைக்கப்பட்டுள்ளன. இதுசம்பந்தமாகவாலிபர்களை எச்சரிக்கையாக இருக்கும்படி யாழ்ப்பாணம் பொலிஸ்சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் ஒருமாத காலத்துக்கு முன்னரே பத்திரிகைகள் மூலமும், கல்லூரி அதிபர்கள் மூலமும் ஓர் அறிவிப்பு விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

கைதுசெய்யப்பட்ட வாலிபர்கள்மீது போக்குவரத்துச்

[6-ம் பக்கம் பார்க்க]

## குற்றச்செயல்களை தடுப்பது இன்றைய தேவை

### பிரதம நீதியரசர் கோரிக்கை

கொழும்பு, செவ்வாய்

'சட்ட பாதுகாப்பு தினத்தை இவ்வருடம் கொண்டாடும் இவ்வேளையில், தற்பொழுது நாட்டின் முக்கிய தேவைபற்றி குறிப்பிடவிரும்புகிறேன். நாட்டில் அதிகரித்துவரும் பாதகச்செயல்களையும், ஒழுங்கீனமான குற்றங்களையும் தடுத்து எல்லா மக்களுக்கும், வாழ்க்கைக்குத் தேவையான பிரதான அம்சங்களை நியாயமான முறையில் பங்கீடு செய்ய வேண்டும். இந்த விஷயத்தில் சமய, சமூக கலாச்சார ஸ்தாபனங்களின் உதவி அவசியம் என்பதை வற்புறுத்த விரும்புகிறேன்".

சட்ட பாதுகாப்புத் தினத்தை யொட்டி பிரதம நீதியரசர் ஏச்.என்.ஜி. பெர்னாண்டோ வெளியிட்டுள்ள விசேஷ செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சட்ட பாதுகாப்பு தினம் நாளை மாலை கொழும்பு றோயல்கல்லூரி மண்டபத்தில் கொண்டாடப்படவிருக்கிறது. திரு. எஸ். சி சேர்வி சொரியா தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் ராஜாங்க மந்திரி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா உரை நிகழ்த்துவார்.

நீதிமந்திரி திரு. ஏ. எப். விஜயமானே, வண. இந்துருவ பண்ணதிசதேரோ, சுவாமி ஸ்ரீ ரங்கானந்தஜீ, திரு. ஈ. பி. விக்கிரமநாயகா, திரு. ரி. சிறிராமநாதன், வண. தோமஸ் சி. குறிகோஸ் ஆகியோரும் உரை நிகழ்த்துவார்கள்.

'யாழ்ப்பாணத்து

## முருங்கைக்காய்க்கு அமெரிக்காவில் கிராக்கி

கொழும்பு, செவ்வாய்

''இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உற்பத்தி செய்யப்படும் முருங்கைக்காய், இஞ்சி போன்றவற்றிற்கு அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் கிராக்கி இருந்தும் நமது ஈழத்து விவசாயிகள் இப்படியான உற்பத்தியிலும் அவற்றை ஏற்றுமதி செய்வதிலும் ஏனோ அக்கறை காட்டாதிருக்கிறார்கள். இதன் மூலம் தமிழர் வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்வதுடன் நாட்டிற்குத் தேவையான அந்நிய செலாவணியையும் சேகரித்துக் கொள்ளலாம்'' என்று வெளிநாடு சென்று திரும்

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாசகம்**

ஒருவனுடைய பிழை அனைவரையும் சார்கிறது. சமூகத்தில் நடக்கும் குற்றங்கள் எல்லாம் சமூகத்திலுள்ள ஒவ்வொருவனையும் பொறுத்தது. இல்லாவிடில் ஒருவன் சமூகத்தில் அடங்கியவன் ஆக மாட்டான்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஹூ வைகாசி மீ 31 உ (14-6-67)

# சட்டதினம்

இலங்கை வழக்கறிஞர் சங்கம் இவ்வருடமும் சட்டப் பாதுகாப்புத் தினத்தை இன்று கொண்டாடுகிறது. அமைதி நிலவவும் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலவவும் சமுதாயம் வளர்ச்சியடையவும் சட்டம் தேவை; அது அவசியமுமாகும். சமுதாயத்தில் சட்டத்தின் முக்கியத்துவத்தையும் சட்டம் என்றால் என்ன என்பது பற்றியும் பொதுமக்களுக்கு உணர்த்துவதற்கு வருடத்தில் ஒரு நாளாவது சட்ட பாதுகாப்புத் தினத்தைக் கொண்டாடும் இலங்கை வழக்கறிஞர் சங்கத்தின் முயற்சி பாராட்டுக்குரியது.

சட்ட பாதுகாப்பு தினக் கொண்டாட்டத்தையொட்டி பிரதம நீதியரசர் திரு. எச். என். ஜி. பெர்ணண்டோ விடுத்துள்ள செய்தியில் நாட்டின் இன்றைய அவசரத் தேவையொன்றைச் சுட்டிக் காட்டியிருக்கிறார். "எமது நாட்டின் இன்றைய முக்கியத் தேவை ஒன்றை இச்சந்தர்ப்பத்தில் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். வன்முறைக் குற்றச் செயல்கள் பரவி வருவதையும் சட்டம் மீறப்படுவதையும் தடுப்பது தான் இன்றைய அவசரத் தேவையாகும். சமய, சமூக கலாசார இயக்கங்கள் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தி தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பதற்காகவே இவை பற்றி வலியுறுத்திக் குறிப்பிட விரும்புகிறேன்" என்று பிரதம நீதியரசர் தமது செய்தியில் தெரிவித்திருக்கிறார்.

இன்னும் இலங்கையை 'தர்மதுவீபம்' என கூறிக்கொண்ட போதிலும் இங்கு வருடா வருடம் அதிகரித்து வரும் கொலை, கொள்ளை போன்ற மற்றும் குற்றச் செயல்கள் இலங்கைக்கு நிச்சயம் பெருமையளிக்க முடியாது. சட்டத்தின் கண்களுக்கு ஏழை பணக்காரன், பெரியவன்; சிறியவன் என்ற பாகுபாடு எதுவும் இல்லை என்பது உண்மையே. ஆயினும் சட்டத்தை அமுல் நடத்தும் பொறுப்புள்ள அதிகாரிகளும் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்புள்ளவர்களும் சிலர் சில சமயங்களில் தங்கள் கடமையைச் சரிவரச்செய்யத் தவறிவிடுவதும் அவர்களே தவறாக நடந்துகொள்வதும் குற்றச் செயல்கள் அதிகரிக்கவும் அமைதி குலையவும் காரணமாகிவிடுகிறது. இதற்கு பல சம்பவங்கள் சான்று.

குற்றச் செயல்கள் பரவாமல் தடுப்பது பொலிசாருடையவும் அரசாங்கத்தினுடையவும் கடமையே என்று பொது மக்களும் பொது ஸ்தாபனங்களும் வாளாவிருந்தால் நமது சமுதாயம் நாசமாகிவிடும் நாம் நாகரிகமடைந்தவர்களென்றும் கூறிக்கொள்ள முடியாது. பிரதம நீதியரசர் கூறுவதுபோல் குற்றச் செயல்கள் பரவாமலும் சட்டத்தை மீறாமலும் கவனித்துக் கொள்ள வேண்டிய பொறுப்பும் கடமையும் பொதுமக்களுக்கும் சமய, சமூக கலாசார ஸ்தாபனங்களுக்கும் உண்டு. இந்த ஸ்தாபனங்களின் உதவியையும் ஒத்துழைப்பையும் பொலிசாரும் மற்றும் அரசாங்க அதிகாரிகளும் பெறவேண்டும்.

## மின்சாரமின்றி மக்கள் கஷ்டம்

முல்லைத்தீவு, செவ்.

முல்லைத்தீவு பட்டன சபையின் கீழ் இயங்கும் மின்சார நிலையததில் உள்ள இயந்திரங்கள் பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் மின்சாரம் பாவனைக்கின்றித் தவிக்கின்றனர். பட மாளிகைகளில் படங்கள் ஓடுவதே கஷ்ட நிலையில் இருக்கின்றது.

சென்ற சில தினங்களாக முல்லைத்தீவுப் பட்டணம் இருள் சூழ்ந்து இரவில் காட்சியளிக்கிறது. இதுபற்றித் தபம் எத்தனையோ முறைகளில் மேலதிகாரிகளுடன் தொடர்புகொண்டும் இதுவரை கவனிக்கவில்லையென பட்டனசபைத் தலைவர் திரு அ. சந்தியாப்பிள்ளை கவலையுடன் தெரிவித்தார்.

[5-ம் கலத் தொடர்ச்சி]

சீனப் பிரதமர் சூ-என்-லாய்- சோவியத் யூனியனை அமெரிக்காவும் சேர்ந்து அரபு நாடுகளின் காலைவாரி விட்டுவிட்டன. இஸ்ரவேலையும் ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்துப் போராடுவதில் நாங்கள் நாஸருக்கு அணு சக்தி உதவியும் கொடுக்கத் தயாராயிருக்கிறோம்.

அல்ஜீரியா தலைவர் போமதியன்- நாங்கள் இன்னும் போரை நிறுத்தவில்லை. எங்களுக்கு நீதி வழங்கப்படும் வரை தொடர்ந்து போர் செய்வோம்.

அரபு நாடுகளை இஸ்ரவேல் சிறுமைப்படுத்தியது பற்றி உலகிலுள்ள முஸ்லிம்கள் எல்லோருக்குமே சற்று கவலைதான். பென்னம் பெரிய ஐக்கிய அரபுக் குடியரசு [எகிப்து] சின்னஞ்சிறு இஸ்ரவேலுக்கு அடிபணிய நேரிட்டது அவர்களுக்கு ஓரளவு அவமானமும் தான்.

யாழ்ப்பாணத்து முஸ்லிம் அன்பர் ஒருவரோடு இது பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தபோது அவர் சொன்னார்- யூதர்கள் தங்களுக்கென ஒரு சொந்த தாயகம் கிடையாது உலகமெல்லாம் அலைந்து திரிந்துகடைசியில் ஓரிடத்தில் வந்து குடியேறுவார்கள், அப்பொழுது ஒரு பெரிய கலம்பகம் நடக்கும், என்று பிபிலிய வேதத்திலேயே கதை இருக்கிறது. அதன் பிரகாரம் நடந்து வருகிறது. இது அவர் சொன்னது.

விரக்தியோடு சொன்னாரோ, வெறுப்புடன் சொன்னாரோ தெரியவில்லை எப்படியாயினும் அக்கம்பக்கம் அயலவர்போல் வாழும் நாடுகள் 'சமாதான சகவாழ்வு' என்றதத்துவத்தை கடைப்பிடிப்பதால் தாங்கள் நிம்மதியாக வாழ்வதுடன், மற்றைய உலகத்து நாடுகளையும் உலக மகாயுத்தம் என்ற பயங்கரப் படுகுழியில் வீழ்த்தாமல் இருக்கலாம்.

- வழிப்போக்கன்

# டாக்ஸிசாரதிகள் எப்படி நடந்து கொள்கிறார்கள்?

## பொலிஸ் அதிபர் தகவல் தரும்படி பொதுமக்களை கேட்கிறார்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்திலுள்ள டாக்ஸிச் சாரதிகள் நடந்து கொள்ளும் முறைபற்றியும் அவர்களது நடவடிக்கைகள் பற்றியும்பூரண தகவல்களை இம்மாத இறுதிக்குள் தமக்குத் தெரிவிக்கும்படி வட பகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் பொதுமக்களைக் கேட்டுள்ளார் பொலிஸ் அதிபருக்கு இது பற்றிய தகவல்களை நேரடியாகவோ அன்றி எழுத்துமூலமோ பொதுமக்கள் தெரிவிக்கலாம்.

கடந்த ஜனவரிமாதத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள டாக்ஸிசாரதிகளையும் சொந்தக்காரர்களையும் கூட்டி, டாக்ஸிசாரதிகள் பொதுமக்களுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென பொலிஸ் சுப்பிரிண்டன் அவர்களுக்குத் தெரிவித்த போதிலும், இந்தஆறுமாதத்திற்குள்ளும், பல டாக்ஸி சாரதிகளும் குறைந்ததூரத்துக்கு டாக்ஸியை வாடகைக்கு விடமறுத்ததாகவும், மீட்டரிலும்பார்க்ககூடிய பணத்தைப்பொது மக்களிடமிருந்து அறவிடுவதாகவும் பல குற்றச்சாட்டுக்களை பொலிஸ் அதிகாரிகளுக்கு பலர்முறையிட்டுள்ளதாலேயேபொலிஸ்சுப்லரிண்டன் மேற்கண்ட அறிவித்தலை விடுத்துள்ளார். மீண்டும் ஜூலை மாத முதல் வாரத்தில் பொலிஸ் சுப்பிரிண்டன் டாக்ஸிச் சாரதிகளுடன்ஒரு மகாநாடு கூட்டவுள்ளது குறிப்பிடத்தக்கது. [ந நி]

சுன்னாகம்

# சிகை அலங்கரிப்பாளருக்கு எதிரான வழக்கு

## 26-ம் திகதி தீர்ப்பு வழங்கப்படும்

காங்கேசன்துறை, செவ்.

முதல்முறையாக தீண்டாமை ஒழுப்புச்சட்டத்தின் கீழ் சுன்னாகம் பொலிசார் சிகை அலங்காரத் தொழிலாளர் ஒருவருக்கு எதிராக மல்லாகம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தாக்கல் செய்திருந்த ஒரு வழக்கு நீதவான் திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

செபமாலை பங்கிராஸ்சாட்சியமளிக்கையில் கூறியதாவது:- பறையர் குலத்தைச் சேர்ந்தவன் நான். சம்பவம் நடைபெற்றதினம் எட்டு மணிக்கு பள்ளகுலத்தைச் சேர்ந்த புலேந்திரன் என்பவருடன் எதிரியின் சிகை அலங்கரிப்பு நிலையத்திற்குச் சென்றேன். அங்கு எதிரியும் வேறொருவரும் இருந்தனர். நான் சிகைஅலங்கரிக்க அவரிடம் கேட்டபொழுது அவர் 'நீ ஒரு பறையன்; உனக்கு சிகைஅலங்கரிக்க முடியாது. இங்கு நிற்காது வெளியே போ' என்று என்னிடம் கூறினார். உடனே நாம் சுன்னாகம் பொலிசில் சென்றுமுறையிட்டோம்."

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த முருகேசு முத்துலிங்கம் தெல்லிப்பழையிலுள்ள தமது சலூனில் தெல்லிப்பழையைச்சேர்ந்த செபமாலை பக்கிராஸ் என்பவருக்கு முடிவெட்ட மறுத்ததாக குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டுள்ள இவ்வழக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புலேந்திரனும் சாட்சியமளித்தார்.

வழக்காளி தரப்பில் திரு. எஸ். நடராசா வாதாடினார். எதிரிதரப்பில் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார். இம்மாதம் 24-ந் திகதிக்கு தீர்ப்புஒத்தி வைக்கப்பட்டது.

இன்று கந்தமுருகேசனர் நினைவுதினம்

# -எந்தை கந்தமுருகேசன்-

(தென்புலோலி பண்டிதர் வீ. பரந்தாமன்)

சங்கமெலாம் ஒருருவைக் கொண்ட தாமோ?
சாற்றுதொல்காப் பியன்பிறந்திங் கெய்தி னனோ?
செங்கரும்பாம் மொழியுடையீர்! சீர்த்தி சான்ற
செந்தமிழைப் பிழிந்தெடுத்த நற்றீஞ் சாறோ?
பங்கமிலான் பண்புடையான் பாரில் நல்ல
பாவலனும் கந்தமுரு கேசற் கேயால்
இங்குவமை உரைக்கவொண தெவரும் என்றால்
இன்னுமென்ன சிறியன்யான் சொல்வன்? மாதோ!

பொறையதனால் பூமியையே ஒத்தான்! பின்னும்
பொலிவதனால் மக்களுள்ளம் மக்கள் ஒத்தான்!
அறையுசெல்வம் நீதியினால் மன்னன் ஒத்தான்!
ஆன்றகல்வி யாற்புலவர் அமைச்சர் ஒத்தான்!
முறைதருமோர் கொடையதனால் வள்ளல் ஒத்தான்!
முந்துகின்ற வீரத்தாற் படையை ஒத்தான்!
குறையிறந்த கந்தமுரு கேசன் தன்பால்
குற்றமிலா ஓரரசு காணலாமே!

செந்தமிழ்த்தாய் வாழ்கதொல்காப் பியன்சீர் வாழ்க!
சிறந்தசங்கப் புலவர்கள் வாழ்க! எங்கள்
அந்தமிலா வள்ளுவன்தன் ஆணை வாழ்க!
அருமையுள அறிஞரறம் வாழ்க! மற்றும்
முந்துகொடை மூவேந்தர் வாழ்க! மேலாம்
முரணில்லாப் பல்கலைகள் வாழ்க! எந்தை
[illegible] வாழ்க!!
[illegible] அருந்தணத்தீர் நீரும் வாழ்வீர்;

## நாட்டிலும் நகரிலும்

இஸ்ரவேல்-அரபு நாடுகள் யுத்தம் [இது மூன்றாவது] ஆரம்பித்தபொழுது உலகம் எங்கும் பலவிதமான அபிப்பிராயங்களும், ஹேஷ்யங்களும், பந்தயங்களும், தீர்மானங்களும் எழுந்தன. சிலர் உலக யுத்தம் மூளுமென்றுபூச்சாண்டி காட்டினார்கள், சிலர் பிரளய காலம் வரப் போகிறதென்று பயந்தார்கள், சிலர் இஸ்ரவேல்'குளோஸ்' என்றார்கள்.

கடைக்காரர் மண்ணெண்ணையை மறைத்துவிட்டார்கள், பால் டின்களைப் பதுக்கினார்கள். கிருகஸ்தர்கள் பெரிய தகரங்களைக் காவிக்கொண்டு கடை கடையாய் ஏறி இறங்கினார்கள். ஒரு கடையில் மெழுகுதிரிகளுக்குக்கூட கிராக்கி ஏற்பட்டுவிட்டதாம்!

ஆறே நாட்களில் இஸ்ரவேல் சேனைகள் அரபு படைகளை வென்று யுத்தம் ஒரு முடிவுக்கு வந்ததும் எல்லோரும் ஏமாந்து போனார்கள். இந்தமாதிரி எதிர்பாராத முடிவுக்கு பலர் பல வகையாகக் காரணங்கள் திரித்தார்கள். ஒவ்வொருவர் கூறும் வித்தியாசமான கருத்துக்களைப் பார்த்தால் வேடிக்கையாயிருக்கிறது. இதோ, சில முக்கியமான கருத்துக்களைத் தருகிறேன்.

மொரொக்கோ மன்னர் ஹஸன்- ஆண்டவன் எங்களை தண்டித்துவிட்டான். ஒருவர்மீது ஒருவர் பழி சுமத்த வேண்டாம் என்று ஆண்டவன் எம்மை [அரபு நாடுகளை] பணித்தான். நாங்கள் அவரை மீறினோம். ஒற்றுமையின்மையாலும் முஸ்லிம்கள் பழிபாவங்களினாலும் நாங்கள் இந்த யுத்தத்தை இழந்தோம். இது ஆண்டவன் கட்டளை.

கெய்ரோ பத்திரிகை 'அக்பர் எல் யோம்'- அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன், பிரிட்டிஷ் பிரதமர் வில்சன், இஸ்ரவேல் தலைவர்கள்— இவர்கள் எல்லோருக்கும் நஞ்சு பருக்க வேண்டும். நாங்கள் நண்பன் என்று நினைத்து ஏமாந்துபோன ஒரு வல்லரசின் தலைவர்களுக்கும் நஞ்சூட்ட வேண்டும்.

இஸ்ரவேல் வெற்றியின் காரணகர்த்தா, பாதுகாப்பு மந்திரி டயன்- ஐக்கிய நாட்டு கண்காணிப்பு படையில் வேலை இல்லை. ஐ. நா. சபை முக்கியமான பிரச்னைகளில் ஒன்றையாவது தீர்த்து வைக்க முடியவில்லை. ஐ. நா.வும் அமெரிக்காவும் எமக்குப் போதிய பாதுகாப்புத் தரவில்லை. அக்கபா குடாவில் சுதந்திரமாக நமது கப்பல்கள் வந்து போகும்வரை சினாய் குடா நாட்டை விடமாட்டோம். நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

இந்திய பிரதமர் இந்திரா காந்தி- ஜனாதிபதி நாஸர் தமது ராஜினாமாவை வாபஸ் செய்ததுபற்றி எனக்கு மகிழ்ச்சி. அவர் ஒரு முற்போக்கு சக்தி. இஸ்ரவேல் அழிக்கப்படுவதை இந்தியா விரும்பவில்லை. ஆனால் இஸ்ரவேல் சீரியா தலைநகரத்தைக் கைப்பற்றுவோம் என்று பயமுறுத்தியபோது தான், இஸ்ரவேலை ஒழித்துக் கட்டுவோம் என்று ஐக்கிய அரபுக் குடியரசு பேச ஆரம்பித்தது.

ஐக்கிய அரபுக் குடியரசு தலைவர் நாஸர்- அரபு நாடுகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து ஒரு உச்சி மகாநாடு கூட்ட வேண்டும். அரபிய உலகத்தின் நிலைமையையும் இஸ்ரவேல்மீது அவை பின்பற்றும் கொள்கையையும் புனராலோசனை செய்ய வேண்டும்.

[2-ம் கலம்பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பிடித்தநிலைகளைவிடுவதா? நடக்கவேநடக்காது'

## இஸ்ரேல் பிரதமர் அறிவிப்பு

ஜெருசலம், ஜூன் 13

''நாம் பிடித்த இடங்களை விடுவதா? நடக்கவே நடக்காது'' என்று இஸ்ரேல் பிரதமர் எஸ்கோல் நேற்று இங்கு கூறினார். பாராளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படியாகச் சொன்னார்.

போருக்கு முன்னர் இருந்த இடங்களுக்கு திரும்பி இஸ்ரேல் போகவே போகாது' என்று அவர் உறுதியாகக் கூறினார்.

அரபுநாடுகளுடன்] தனித் தனி நேரடிப் பேச்சு வார்த்தை நடாத்த இஸ்ரேல் தயாராக இருப்பதாகவும் இஸ்ரேல் பிரதமர் கூறினார்.

''இஸ்ரேலைப் பொறுத்த வரையில் பல பிரச்னைகள் இருந்தபோதிலும் முக்கியமான பிரச்னைஒன்றுதான். போர் மூலமாகவோ, அன்றி சமாதான முறையிலோ பிரச்னையைத் தீர்த்துக் கொள்வதா என்பது தான்'' என்று பிரதமர் எஸ்கோல் தமது உரையின் போது தெரிவித்தார்.

இஸ்ரேல் போர் நிறுத்தத்தை தவருது கடைப்பிடிக்குமென்றும் அவர் தெரிவித்தார்.

## ஐ. நா. பந்தோபஸ்த்து சபை கூட்டம் ஒத்திவைப்பு

### இஸ்ரேல் உறவை போலந்து துண்டித்தது

நியூயார்க். ஜூன், 12

போர்நிறுத்தம் சம்பந்தமாக செய்யப்பட்ட புகார் பற்றி ஆராய்வதற்காக இன்றுகாலை கூடவிருந்த ஐ. நா. பந்தோபஸ்து சபையின் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. தனிமுறையில் இவை ச்ம்பந்தமாக ஆலோசனை நடத்தப்படுவதற்காகவே கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதாக அறிக்கப்பட்டது. போர்நிறுத்த அமுல் சம்பந்தமாக விபரமான அறிக்கையொன்றை யுதாண்ட் சமர்ப்பிக்கவேண்டுமென்று அங்கத்தவர்கள்சிலர்வற்புறுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

போலந்து அரசாங்கம் இஸ்ரேலுடனை தனதுசகல ராஜ்ய உறவுகளையும் துண்டித்துக் கொண்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்திய ராஜதந்திரி மீது சுமத்தப்பட்டுள்ள--

# 'அபாண்டபழிக்கு சீன மன்னிப்பு கோரவேண்டும்'

## சீனவுக்கு பாரதத்தின் கடும்எச்சரிக்கை

புதுடில்லி, ஜூன்13

'கட்டுக்கதை புனைந்து, பீகிங்கிலுள்ள இந்திய தூதரக காரியதரிசிமீது சுமத்தியிருக்கும் அபாண்ட பழிக்கு சீன மன்னிப்புக்கோரவேண்டும். இல்லையேல் இதனுல் ஏற்படும் நடவடிக்கைகளுக்கும், பாரதூரமான விளைவுகளுக்கும் நாம் பொறுப்பாளியல்ல' என்று பாரதம் சீனவுக்கு எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

பீகிங்கிலுள்ளஇந்தியதூதரகத்தின் இரண்டாவது உயர்தரக்காரியதரிசி திரு. ரகுநாத்தை உளவு பார்த்ததாகக் குற்றஞ்சாட்டி, அவரை எவ்வித ராஜதந்திரக் கடமைகளையும் செய்ய முடியாதபடி சீன அரசாங்கம் தடை விதித்திருப்பதைத் தொடர்ந்தே இந்தியா தனது கடும் ஆட்சேபனையை இந்திய தூதர்மூலம் சீனவுக்குத் தெரிவித்திருக்கிறது.

திரு.ரகுநாத்துடன் இன்னொரு இந்தியத் தூதரகஅதிகாரியும் உளவுவேலைகளில் ஈடுபட்டதாக சீன அரசாங்கத்தால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

### தொலைபேசியில் தொடர்பு

பாரதப் பொறுப்பதிகாரியொருவர் நேற்று பீகிங்கிலுள்ள இந்தியத் தூதரகத்துடன் நேற்றிரவு தொடர்பு கொண்டதாகவும், அப்போது உண்மை விஷயங்கள் விபரங்கள் தெரிவிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

குன்றுகளையும், இயற்கைக் காட்சிகளையும்தான் திரு.ரகுநாத் படம்பிடித்தா ரென்றும், சீன குற்றஞ்சாட்டியிருப்பதுபோல் ராணுவப் பகுதிகள் எதையுமே அவர் படம்பிடிக்க வில்லையென்றும் அங்கிருந்து கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### பாரததூதரகமுன் ஆர்ப்பாட்டம்

நேற்று பீகிங்கிலுள்ள பாரத தூதரகத்துக்கு முன்னல் ஒரு கோஷ்டியினர் நின்று ஆர்ப்பாட்டம்செய்ததாகவும், அவர்கள் உள்ளே நுழைய முற்பட்டபோது செங்காவலர்கள் தடுத்து நிறுத்தியதாகவும் நவசீன செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

மற்றும் பீகிங் வீதிகளில் சென்ற வெளிநாட்டவர்கள் கேலியும், கிண்டலும்செய்து அனுப்பப்பட்டனரென்றும், பிரிட்டிஷ், அமெரிக்க தூதரகங்களின் முன்னுலும் ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டதாகவும் அறிவித்தது.

### தூதரகத்துள் ரகுநாத்?

திரு.ரகுநாத் பாரத தூதரகத்தின் உள்ளே இருப்பதாக ஒரு செய்தி தெரிவித்தது.

திரு.ரகுநாத்தின் மீதும் மற்ற அதிகாரிமீதும் சாட்டப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகள் சீனவிலுள்ள நீதிமன்றமொன்றில்விசாரிக்கப்படுமென்றும், அதன்பிறகே குற்றவாளியாசுற்றவாளியா என்பதைப் பொறுத்து அவர்கள் விடுதலைசெய்யப்படுவார்களென நவசீன செய்திஸ்தாபனத்திலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜூன் 4ந் திகதியே திரு ரகுநாத் உளவு பார்த்ததாகக் கூறப்படும் சம்பவம் நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

---

## எகிப்துக்கு சீன போர் விமானங்கள்

ஹாங்கொங், ஜூன் 13

சீன ஐக்கிய அரபுக் குடியரசுக்கு மூன்று போர் விமானங்களை அனுப்பி வைத்திருப்பதாக செய்தி கிடைத்துள்ளது. இந்த போர் விமானங்களில் நவீன பல ஆயுதங்களும் அனுப்பப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது,

மத்திய கிழக்கில் இஸ்ரேலையும், 'ஏகாதிபத்திய'த்தையும் எதிர்த்துப் போராட கம்யூனிஸ்ட் சீன நாஸருக்களிக்கும் உதவியின் முதற் கட்டமே இது என்று விஜயமறிந்த வட்டாரங்கள் வர்ணித்தன.

நாஸரை கெய்ரோவிலுள்ள சீனத்தூதுவர் நேற்று முன்தினம் 24 மணி நேரத்துள் இருமுறை சந்தித்ததாக கெய்ரோவிலிருந்து கிடைத்த செய்தியொன்று தெரிவித்தது.

## மக்கள் சுகாதார விழா

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் மக்கள் சுகாதாரவாரக்குழு இன்று சுகாதாரவிழா கொண்டாடுகிறது. பிற்பகல் 3-30 மணிக்கு ஆரோக்கிய குழந்தைகள்தெரிவுநடைபெறும். பிற்பகல் 5-30 மணிக்கு நடைபெறும் பொதுக் கூட்டத்தில் மாநகரஆணையாளர் திரு. கட்சன் செல்வராசா தலைமைவகிப்பார். டாக்டர்கள் கே. கனகரத்தினம், பி. சிவசோதி, எஸ். இராசசூரியர், செல்விகள் பி. இம்மானுவல், எஸ். சவிரிமுத்து. திரு- செ. வீரசிங்கம் ஆகியோர் உரைநிகழ்த்துவர். பாடசாலை மாணவர்களின் கதம்ப நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறும்.

## அடிக்கல் நாட்டுவிழா

கோப்பாய், செவ்.

கோப்பாய் நாவலர் பாடசாலைக்கான புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா வலி-கிழக்கு காரியாதிகாரி திரு. என்.வேதாரண்ய சேயோன் தலைமையில் நடைபெற்றது. இக்கட்டடத்திற்கு சுமார் பதினையாயிரம் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## உற்சவம்

துன்னலை, செவ்.

துன்னலை வெல்லிங்கன் தோட்டப் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. 21-ந் திகதி தேரும், அடுத்த நாள் தீர்த்தமும் நடைபெறும்-

## இடமாற்றம்

இமையாணன், செவ்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் கடந்த 15 வருடங்கள் விஞ்ஞான ஆசிரியையாகக் கடமையாற்றிய திருமதி [illegible] இம்மாதம் தொடக்கம் உடுப்பிட்டி [illegible] கல்லூரிக்கு மாற்றலாகிச் சென்றுள்ளார்.

## யாழ்ப்பாணத்துநாவலர்தொண்டினை இந்தியா அனுபவிக்கின்றது

யாழ்ப்பாணம், செவ்.

'நாவலர் பெருமான் யாழ்ப்பாணத்தில் தோன்றியது யாழ்ப்பாண மக்களின் தவப் பயனேயாகும். அவரை ஈன்ற பெருமை யாழ்ப்பாணத்துக்கு என்றும் உண்டு. தமிழ் வளர்த்த பெருமானை ஈன்ற பெருமையினுல் யாழ் நகர் என்றுமே உலகநாடுகளிடையே தலைநிமிர்ந்து நிற்கும், அவர் யாழ்ப்பாணத்தில் பிறந்தாலும் அவரது தொண்டை நாம் இந்தியாவிலிருந்து கொண்டும் அனுபவிக்கின்ருேம் அதனுல் எமக்கும்கடமைப்பாடுண்டு'

மேற்கண்டவாறு தருமபுர ஆதீன தவத்திரு சோமசுந்தரத்தம்பிரான், அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தின் ஆதரவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற சேக்கிழார் விழாவின் முதலாம் நாள் மாலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

விழா ஆரம்பமாவதற்கு முன்னர் தவத்திரு சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகளும், அவருடன் இந்தியாவிலிருந்து வந்திருந்த திரு. சுவாமிநாதனும், சேக்கிழார்திருவுருவப்படத்துடன் வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலிலிருந்து வீதிவழியாக மேளவாத்தியங்களுடனும். பண்ணிசையுடனும், குடை, கொடி, ஆலவட்டங்களுடனும் விழா அரங்கிற்கு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். வீதிநெடுகிலும் மக்கள் பூரண கும்பங்கள் வைத்து சுவாமிக்கு மலர் மாலையிட்டு வரவேற்புக் கொடுத்தார்கள். ஈழநாடு ஸ்தாபனத்தின் சார்பிலும் சுவாமிகளுக்கு ஸ்தாபன வாசலில் மலர்மாலை, சந்தனம் ஆகியன இட்டு வரவேற்புக் கொடுக்கப்பட்டது.

தவத்திரு சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் விழாவில் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:

தமிழையும் இந்து மதத்தையும் பரப்ப எம்மத்தியில் 63 நாயன்மார்கள் தோன்றினர்கள். பெயரளவிலும் உருவத்திலும் அவர்கள் மாறுபட்டிருந்தாலும் அவர்கள் லட்சியம் ஒன்றே. அவர்கள் 63 கோணத்தில் நின்று தமது தொண்டைச் செய்தார்கள் அவர்கள் தமது வாழ்க்கைக்கு ஏற்றவகையில் தொண்டு புரிந்தனர். அதற்காக அதன் பயனையோ விளம்பரத்தையோ அவர்கள் எதிர்பார்க்கவில்லை இதுவே உண்மையான தொண்டாகும். அவர்கள் தம் தொழிலையே தொண்டாக்கினுர்கள். ஆனுல்இன்று தொண்டு தொழிலாகமாறியுள்ளதை நாம் எங்கும் காணமுடிகின்றது. இந்த நிலை அடியோடு மாறவேண்டும்.

நாம் இன்றிருக்கும் வீடும் வீடே. மறுமையில் இன்பம் தரும் சுவர்க்கலோகமும் வீடே. இந்த வீட்டில் தொண்டு செய்து பழகல் வேண்டும். எம்மத்தியில் இறைவனைத்தொட்டுப்பூசிக்கிறவர்களை இறைவனுகவே நாம்மதிக்கவேண்டும். அவர்கள் தான் உண்மையான தூய்மையான மனமுடைய சிவனடியார்கள் இந்த உலக வீட்டிலிருந்துகொண்டே மறுஉலக வீட்டையடைய நாம் வழிகோலவேண்டும். பேரின்பம் என்ற ஒன்றை விளக்குவதற்காகவே இவ்வுலக இன்பம் எமக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. இதனையே சேக்கிழார்பெருமான் தமது புராணத்தில் எங்கும் வலியுறுத்தியுள்ளார். சே. என்ருல் மாடு, மாடு என்ருல் செல்வம். சேக்கிழார் என்ருல் செல்வத்தையுடையவர் என்று பொருள்படும்.

பெரியபுராண நாயன்மார்களின் பெண்கள் பெரிய லட்சியப் பெண்களாவர். இக்காலப் பெண்கள் புராண காலப் பெண்களைப் பின்பற்றவேண்டும். பெண்கள் எப்படி வாழவேண்டும் என்பதற்குப் பெரியபுராணம் ஓர் எடுத்துக்காட்டாகும்.

இல்லறவிருட்சத்தில் ஆண்கள் மரம். பெண்ணே வேராகும். இல்லறம்செழிக்கப் பெண்களே காரணமாகுவர். உடல், அறிவுநிலை, பெண்மை ஆகியன வற்றைக் கொண்டுதான் தொண்டு அமையும். அந்தணர்கள் முத்தீயை வளர்ப்பார்கள். பெண்கள் கற்புத்தீயை வளர்ப்பார்கள். எனவே வாழ்க்கைக்கு, இல்லறம் செழிக்க பெண்களே மூலவேராவர் [ந நி]

## விவசாயிகளுக்கு மண்வெட்டி

வட்டுக்கோட்டை, செவ்

இப்பகுதியிலுள்ள பல நோக்கு கூ. சங்கங்களுக்கு வலி.மேற்கு ப.நோ.கூ சமாசம் போதியளவு மண்வெட்டிகளை வழங்கியிருக்கிறது. இதனுல் விவசாயிகள் ஆளுக்கொரு மண்வெட்டி வீதம் பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

## பல்கலைக்கழகப் பரீட்சைகள்

புன்னலைக்கட்டுவன், திங்.

இலங்கைப் பல்கலைக் கழகம் நடத்தும்கலை, விஞ்ஞான பட்டதாரிகள் இறுதிப் பரீட்சை ஜூலை 22-ம்திகதியும், பொதுக் கலைத்தராதரப் பரீட்சை, முதற் சட்டப் பரீட்சையாதியன ஆகஸ்ட் 6-ம் திகதியும் நடக்குமெனத் அறிவிக்கப்பட்டுள்ளது இப் பரீட்சைகள் கொழும்பு கண்டி, ஆகிய இ[illegible] நடைபெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரவெட்டி

## விவசாயிகள் மகஜர்

உடுப்பிட்டி, செவ்வாய்
"கரவெட்டி மேற்கில் 18க்குமதிகமான குடும்பங்கள் பரம்பரை பரம்பரையாக உணவு உற்பத்தி செய்து சீவனம் நடத்தி வரும் 'வாரியத்தலை' என்னும் தோட்ட நிலத்திற்கு செல்வதற்குப் பாதையின்றிப் பெரும் கஷ்டமடைந்து வருகின்றனர். இத்தோட்டத்தில் பெரும் பாதையோரமாகவுள்ள தோட்ட நிலச் சொந்தக்காரர்கள் அந்நிலங்களை கையிருப்பு நிலங்களாக்கிக்கொள்ளும் போது தொன்று தொட்டு இருந்துவந்த வழிப்பாதைகளை மூடியடைத்துக்கொண்டார்கள்.

இதனுல் நடுப்பகுதியில் உள்ள 350 பட்டி நிலங்களுக்குப் பாதையில்லாமல் போயிற்று. தற்போது சுற்றிவரவுள்ள குடிநிலச் சொந்தக்காரரின் தயவைப் பொறுத்தே அவர்களின் குடி நிலங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இந்நிலை தொடர்ந்து நீடிக்குமானுல் கூடிய விரைவில் விவசாயிகள் வெளியேறி இந்த 350 பட்டி நிலமும் உணவு உற்பத்தி செய்ய முடியாது போய்விடும் என அஞ்சுகிறேம். இந்நிலைமையைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் பார்வையிட்டு இப்பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்து வைக்க முயலவேண்டும்" எனக் கோரும் மகஜரொன்றைக் கரவை சிந்தாமணி விநாயகர் சனசமூக நிலையத்தினர் அண்மையில் நடைபெற்ற மேற்படி நிலையத்தின் 13-வது ஆண்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளையிடம் ஒப்படைத்துள்ளார்.

## பேச்சுப் போட்டி

உரும்பராய், செவ்.
வலிகாமம் கிழக்குத் தமிழாசிரியர் சங்கத்தின் சார்பில் கோப்பாய் வட்டாரப் பாடசாலைகளின் பேச்சுப் போட்டி விழா நாளை புதன் கிழமை அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

கோப்பாய் வட்டார வித்தியாதிகாரி திரு. ஆ. சிவகுரு பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் இப் பேச்சுப் போட்டி விழாவிலே இருநூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் போட்டியில் கலந்து கொள்கின்ருர்கள்.

## மகோற்சவம்

கோப்பாய். செவ்
கோப்பாய் வெள்ளெருவை விநாயகராலய வருட மகோற்சவம் இன்று கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகியது. இம்மாதம் 21ம்திகதி சித்திரத் தேர்ப்பவனியும் 22ம்திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## மாணவர் சிரமதானம்

அராலி, செவ்.
இப்பகுதியிலுள்ள பாடசாலை மாணவ, மாணவிகள் பாடசாலை வளவுகள், மருத்துவநிலையங்களில் தோட்ட வேலைகளிலும், சுத்தஞ் செய்வதிலும் ஈடுபட்டனர். பெண்சாரணிகள் மருத்துவ நிலைய காய்கறித் தோட்டத்தில் மிளகாய்ச் செடிகளை நாட்டினர்,

ஃ ஃ ஃ

உரும்பராய், செவ்.
"மாணவர்கள் தமக்குமட்டுமன்றி சமுதாயத்துக்கும் உதவி செய்பவர்களாகவும் நல்ல வழிகாட்டிகளாகவும் பிரகாசிக்க வேண்டும். அரசாங்கம் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் சிரமதானப் பணியில் ஈடுபட பாடசாலை நாட்களை ஒதுக்கியிருப்பது வரவேற்கக் கூடியதாகும்" என சென்ற திங்கட்கிழமை உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலை மாணவர்களின் சிரமதானப் பணியை ஆரம்பித்து வைத்த பாடசாலை அதிபர் திரு. சு. குமாரசேகரம் கூறினுர்.

இச் சிரமதானப் பணியில் எழுநூறுக்கு மேற்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் ஈடுபட்டனர். பாடசாலைவளவும் அயலிலுள்ள கற்பக விநாயகர் வீதியும் மேற்கு வீதியில் உள்ள பாதையும் செப்பனிடப்பட்டன.

ஃ ஃ ஃ

நாவற்குழி, செவ்.
நாவற்குழி மகாவித்தியாலயத்திற்கென அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டகாணிகளில் விளையாட்டு மைதானம் ஒன்றினை அமைப்பதற்காக வித்தியாலய அதிபர் திரு. கந்தையா தலைமையில் வித்தியாலய மாணவ மாணவிகள் சிரமதானத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## மாணவிகள் கஷ்டம்

புன்னுலைக்கட்டுவன், திங்.
இராமநாதன்கல்லூரி மாணவிகளும், உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகளும் சுமார் ஒன்றரை மணி நேரம் பஸ் வண்டிக்காகக் காத்திருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதெனக் கூறும் நூற்றுக்கணக்கான பெற்ரேர்களின் கையொப்பமிட்ட மகஜர் ஒன்று இ. போ. ச. மேலதிகாரிகளுக்கு இன்று அனுப்பப்பட்டுள்ளது. நவாலியிலிருந்து பிற்பகல் 4-45 மணிக்கு புறப்படும் பஸ் சுமார் 5 மணிக்கே உடுவில், இணுவில் ஆகிய பகுதிகளுக்கு வருவதாகவும் இதன் விளைவாக 3-30 மணிக்கு மூடப்படும் உடுவில், இராமநாதன் பாடசாலை மாணவிகள் சுமார் ஒன்றரை மணி நேரம் வீதிகளில் காத்திருக்க வேண்டியுள்ளதென்றும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வலி. மேற்கு விளையாட்டுச் சங்கம்

சுழிபுரம், செவ்.
"மாலை நேரத்தில் வேலையொன்றும் செய்யாது மிகவும் சோம்பலாக இருக்கும் ஒருவன் விளையாட்டில் ஈடுபடுவதால் தன் உடல், மனவளத்தை நன்கு அமைத்துக் கொள்ளலாம். வேலைகள் ஒன்றும் செய்யாது சும்மா இருப்பதால் பற்பல கஷ்டங்கள், குற்றங்கள் ஏற்படுகின்றன. குற்றங்கள், குறைகள் நடைபெருது தடுக்க விளையாட்டு ஒரு சாதனமாகும்" என்று வலிகாமம் மேற்கு விளையாட்டுச் சங்க அமைப்புக் கூட்டத்தில் பேசிய சங்கானை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. என். டயஸ் கூறினுர். இக் கூட்டத்தில் டாக்டர் என். ரி. சம்பந்தர், திரு. சொ. கந்தையா, திரு. கா. அரிச்சந்திரன் மற்றும் பலரும் பேசினர்.

சங்க நிர்வாகிகளாகப்பின் வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்-சி. கந்தையா, உபதலைவர்-வி. இராசசுந்தரம், காரியதரிசி-கா. அரிச்சந்திரன். நிர்வாகிகள்-க. வாமதேவன், எஸ். சச்சிதானந்தம், ஜே. மயில்வாகனம், டாக்டர் கே. குமாரசாமி, டாக்டர் எஸ். செல்வத்துரை, த. சிவசுந்தரம்பிள்ளை இ. கந்தமுத்து, கே. ஜேம்ஸ்

## "கவியால் அணி செய்தார்கள்"

உடுப்பிட்டி, செவ்
"சென்ற ஐந்து வருடகாலமாக ஈழத்தில் வெளிவந்த கவிதைகள், நாடகங்கள், சிறுகதைகள் மிகவும் உயர்ந்த தரத்தைப் பெற்றுள்ளன. 1956-ம் ஆண்டிற்குப் பிறகு ஈழத்தில் 75 கவிதைத் தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. உணர்ச்சிதான் கவிதைக்கு ஊற்று. எமது நாட்டிலே கவிதை பாடியவர்களுள் ஆறுமுகநாவலர், சோமசுந்தரப் புலவர், சின்னத்தம்பிப் புலவர் ஆகியோர் தமிழுக்குப் பெருமையூட்டியுள்ளனர். இந்தியாவிலே பாரதியாருக்குப் பின் வந்த புலவர் யாவரும் சோமசுந்தரப் புலவரின் திறமைக்கு மண்டியிட்டனர். காலஞ்சென்ற கவிஞர் செல்லையாவேந்தனர்போன்றவர்கள் தமிழன்னைக்குக் கவியால் அணி செய்தனர்" என்று இரசிகமணி கனக. செந்திநாதன். கரவெட்டி வடக்கு வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி இலக்கிய மன்றக் கூட்டத்தில் கூறினுர்.

'யாழ்வாணன்' பேசும் பொழுது, "இலக்கியம் என்பது வாழ்க்கை உரிதை. நல வாழ்க்கைக்கு இலக்கியம் வழிகாட்டி சிறுகதை நாடகம் முதலியன எழுதுவது மிகவும் கடினமானதொரு வேலையே. எம் நாட்டைப் பொறுத்தவரையில் நாடக் கலை அதிகம் முன்னேறவில்லை. வசதியீனங்கள் பல இருப்பதே இதற்குக்காரணமாகும்" என்று சொன்னுர்.

மன்றச் செயலாளர் செல்வன் வி. சிவராசலிங்கம் நன்றி கூறினுர்.

## தாச்சிப்போட்டி

சண்டிலிப்பாய், செவ்
சண்டிலிப்பாய் ஹொலிவூட் கழகத்தின் இரண்டாவது பிரிவிற்கும், சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்களுக்குமிடையே நடைபெற்ற தாச்சிப்போட்டியில் ஹாலிவுட்கழகம் 3-1 பழங்களால் இந்துக்கல்லூரிமாணவர்களைத் தோற்கடித்தது. இப்போட்டிக்கு ஆசிரியர்கள் அமிர்தலிங்கம் பொன்னுத்துரை ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

கோப்பாய், செவ்
தற்போது வலி-கிழக்கு காரியாதிகாரியாக கடமையயற்றும் திரு. என். வேதாரண்ய சேயோன் உத்தியோக உயர்வு பெற்று மன்னுருக்கு உதவி அரசாங்க அதிபராக இம்மாதம் 20ம்திகதி முதல் பதவியேற்கவுள்ளார். பளைக் காரியாதிகாரியாக சேவை புரியும் திரு. வி. கந்தப்பிள்ளை இப்பகுதிக் காரியாதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.


# போர் ஏசஸ்

## குறைந்த விலையில் சிறந்த புகை பிடி இன்பம்




போர் ஏஸ், தரமுயர்ந்த புகையிலையின் பெறுமதியான சுவையையும், நவீன பில்டர் முனையின் மென் சுகத்தையும், கவர்ச்சியான எட்டே எட்டுச் சத விலையில் தருகிறது.

இலங்கையில் தயாரிப்போர்:
சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்

CTC-75

## பூஜைக்கு - அபிஷேகத்துக்கு

தேவையான

பொருட்கள்

கிடைக்குமிடம்

### சுந்தரம் பிறதர்ஸ்

மருந்துக்கடை

(புதிய பஸ்நிலையத்துக்கு அருகாமை)

73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### யாழ்ப்பாண மாநகரசபை சோலைவரி இரண்டாம் கந்தாயம் 1967

1967-ம் ஆண்டு முதலாம் கந்தாயத்துக்கான சோலை வரிப்பணம் 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்னர் மாநகர சபை அலுவலகத்தில் செலுத்தப்பட வேண்டும்.

குறிப்பிட்ட இக்கால எல்லைக்குப் பின்னர் செலுத்தப்படும்பணத்துடன் 10 வீதம் வெலியாத்துப்பணம் அறவிடப்படும்.

காசோலைகள், காசுக்கட்டளைகள், அஞ்சற் கட்டளைகள் முதலியன மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 30-6-67-ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் மாநகரசபை அலுவலகத்தில் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். இவ்விதம் பணம் அனுப்பும் பொழுது வீட்டு இலக்கம், தெருப்பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்கள் தெளிவாக அறிவிக்கப்பட வேண்டும்.

கட்சன் செல்வராசா,
மாநகர ஆணையாளர்.
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
10-6-67. 2346

**வியாபாரம பெருக விளம்பரம செய்க**

### கேள்வி விளம்பரம்

1. ஒப்பந்தவேலை.. புத்தூர் 6-ம் வட், கிரிச்சால் வீதி அமைத்தல்.

2. கேள்விப்பத்திரம். [1] கொடுத்தல் 26-6-67, 2-30 மணி வரை. [2] ஏற்றல் 28-6-67, 9-00 மணி வரை, காலை.

3. தகுதி [1] பத்தாயிரம் ரூபா பதிவு ஒப்பந்தகாரர்கள். [2] கேள்விப்பத்திரப்பணம் ரூபா 50/00.

[3] கேள்விப்பத்திரக் கட்டுப்பணம் ரூபா 05/00. இப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

4. விபரம் அறிதல். உ. ஆ. உ. ஆணையாளார் அலுவலகம், யாழ்ப்பாணம். கிராமசபை அலுவலகம், புத்தூர்.

சி. நடராசா,
தலைவர்,
கிராமசபை, புத்தூர்.
9-6-1967 2343

### BAND பாண்ட்வாத்தியம்

உங்கள் வைபவங்களுக்கு மேளம், கதிரைகள் தற்போது கீழ்க்காணும் விலாசத்தில் கிடைக்கும்.
யாழ். பாண்ட் வாத்தியம்,
191, ஆஸ்பத்திரி வீதி,
2344 யாழ்ப்பாணம்.

### அறிவித்தல்

திரு. V. S. அருளப்பா இளைப்பாறிய R. F. O. பெரியவிளான், இளவாலை எமது பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். தேவையான விபரங்களை அவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அருணா ஏஜென்ஸீஸ்
அளவெட்டி. 1797

### சிங்கள மாணவர்க்கு குறைவான புள்ளிகள்

கொழும்பு, செவ்.

'ஜி. சி. ஈ. உயர்தர செய்முறைப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்த சிங்கள மாணவர்களுக்கு பௌதீகத்தில் குறைவாகப் புள்ளிகள் போடப்பட்டதால், தமிழ் மாணவர்கள் சிங்கள மாணவர்களைவிட கூடுதலாக அப்பாடத்தில் சித்தியடைந்துள்ளார்கள்' கொழும்பு மாவட்ட மத்தியபாடசாலை பெற்றூர்-ஆசிரிய சங்கம் கல்விமந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லையிடம் சமர்ப்பித்துள்ள மகஜரொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

உடுப்பிட்டி, செவ்.

பணம்திருடியதாகத்தம்பு ஆறுமுகம் என்பவர் மீது பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரியைக் குற்றவாளியெனக் கண்ட பருத்தித்துறை நீதவான் 2மாதச் சிறைத் தண்டனை விதித்தார்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

லொறி

நல்ல நிலைமையிலுள்ள ஒஸ்டின் டீசல் [மொக்கன் மொடல்] லொறி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 6, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம். 2439

### தேவை

வேலை

சைக்கிள், தையல்மெஷின் பழுது பார்ப்பதில் அனுபவமும் திறமையுமுடைய மணமான நடுத்தரவயதுடைய இலங்கைத் தமிழருக்கு வேலை தேவை. K. குமாரசாமி, 30/30சித்தி விநாயகர் கோவிலடி, அரியாலை. 2135

### கல்வி

வகுப்புகள்

ஆரம்ப [Prep] இறுதி G. C. E. [சாதாரணம்]க்கு விஞ்ஞானப்பாடங்கள் கற்பிக்கப்படும். ஆடி மாதப் பரீட்சைக்கு விசேடவகுப்புகள் உண்டு விபரங்கட்கு- 62, அரசடி வீதி, [யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகாமை] யாழ்ப்பாணம். 2436

### விற்பனைக்கு

கோழிகள்!

கேரும் பேடு ரூபா15/- கூவும் சேவல் ரூபா6/- ஒருமாசப்பேடு ரூபா4/-முட்டை தாங்கி[EggTray] -/75சதம். அருணா ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 1888

கார்:

நல்ல நிலையில் EN 7000 இலக்கத் தொடரில் A 50 [Austin] ஒஸ்டின்கார்ஒன்று விற்பனைக்கு உண்டு. 332, நாவலர்வீதி, நல்லூர் தெற்கு, யாழ்ப்பாண முகவரியில் திரு. பீ. டபிள்யு. இரத்தினத்துடன் தொடர்பு கொள்ளவும். 2438

வீடும் வளவும்

காரைநகர்-வலந்தலை நடுத்தெருவில் 4,1/2 பரப்பு நிலம் கல்வீடு, வற்றாதநல்ல தண்ணீர்க்கிணற்றுடன் விற்பனைக்குண்டு. வலந்தலை கிராமசேவகர் அல்லது யாழப்பாணம்- ஒட்டுமடம், பொன்னப்பா ஒழுங்கை-ப, வித்தியானந்த சர்மாவைத் தொடர்பு கொள்க. 2431

வீடும் வளவும்

யாழ்ப்பாணம் கதீட்றல் வீதியில் பெரிய கிறீஸ்தவ ஆலயம் சென்பற்றிக்ஸ் பாடசாலை, கொன்வென்ற் பாடசாலை இவற்றுக்கு அருகாமையில் 5 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் விளம்பர இல. 2434, ஈழநாடு மே/பா த. பெ. எண் 49 யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 2434

### பிரதமர் பயணமானார்

கொழும்பு, செவ்.

பிரதமர் டட்லி சேனநாயக்கா இன்றுகாலை கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து கனடா பயணமானார். விமான நிலையத்தில் மல்வத்தை பீடத்தின் அதிபதி மகாநாயக்க தேரோவின் தலைமையில் பயணமாவதற்கு முதல் பிரதமருக்கு மரியாதை உபசாரம் அளிக்கப்பட்டது. மகாதேசாதிபதி, மந்திரிகள் உட்பட பல பிரமுகர்கள் பிரதமரை வழியனுப்ப வந்திருந்தனர். பிரதமர் வெளிநாட்டிலிருக்கும் சமயத்தில் அரசாங்கத் தலைவராக ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர், ஜெயவர்த்தனா இருப்பர்.

---

இன்று முதல் விநியோகம்

# குரங்கு மார்க்

## யாழ்ப்பாண மண்வெட்டிகள்



உடனடியாகப் பெறுங்கள்
உங்கள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம்

**யாழ்ப்பாண ஏக விநியோகஸ்தர்கள்:**

வலி-கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
நீர்வேலி.

**இலங்கை ஏக விநியோகஸ்தர்கள்:**

## ஸ்டீல்சன்ஸ்

47, சென். லோறென்ஸ்ரேட்,
கொழும்பு-6.

---

அரஸ்கோ

## மயில் மார்க் கற்பூரம்




ஜப்பானிலிருந்து நம் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட 960 வில்லைகள் கொண்ட ரின் கற்பூரத்திற்கு எவ்வகையிலும் குறைவுபடாது எல்லாவகையிலும் அதற்கு நிகரான ரின் கற்பூரம் எங்களால் தயாரிக்கப்படும் ''மயில்'' மார்க் ரின் கற்பூரமே.

எங்கள் கற்பூரம் கொஞ்சமும் கலப்பு இன்றி சுத்தமான விளைவு கற்பூரத்தில் தயாரிக்கப்பட்டது.

மயில் மார்க் கற்பூரம் 128 வில்லைகள் கொண்ட 1/4 இரு., 1/2 இரு. பெட்டிகளிலும் உண்டு.

**மயில் மார்க் கற்பூரம்**
என்றே கேட்டு வாங்குங்கள்

சில்லறை விலை

1/4 இரு. பச்சை பெட்டி ரூபா 4-25 சதம்.
1/2 இரு. மஞ்சள் பெட்டி ரூபா 7-50 சதம்.
960 வில்லைகள் கொண்ட
தகரப்பெட்டி ரூபா 15-00

தயாரிப்பாளர்:

அரஸ்கோ கற்பூரத் தொழிற்சாலை,
பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தலைமைக்காரியாலயம்
106, றெக்ளமேஷன் ரேட்; கொழும்பு-11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மொழி பெயர்ப்பில்

# சொல்லாக்க வரையறை வேண்டும்' — பண்டிதர்

கிளிநொச்சி, செவ்வாய் 'விஞ்ஞான பாடநூல்களில் பிறமொழிச்சொற்களை தமிழில் வழங்கும்போது சொல்லாக்க வரையறைக்குட்படுத்தி ஆள்வதில்லை என்றும் சொல்லாக்கக்குழுவொன்றும்நியமிக்கவேண்டுமென்றும் கிளிநொச்சி எம். பி.பண்டிதர் கா.பொ.இரத்தினம் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

பண்டிதர் இரத்தினம் தமது கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

'கல்வி வெளியீட்டுப்பிரிவு சில ஆண்டுகளுக்கு முன்னர் கைக்கொண்ட பிறமொழிச் சொற்களை தமிழ்மொழிமயமாக்குவதற்கு ஆளப்பட்ட முறை கைவிடப்பட்டுவிட்டதென அறியப்படுகிறது. பிறமொழிச் சொற்களை தமிழ்படுத்தும் பொழுது சொல்லாக்க வரையறைக்குள் படுத்தி ஆளச்செய்தல் தமிழ்மொழியின் வாழ்வுக்கும் வளத்துக்கும் வழிகோலுவதாக அமையும். ஆகையால் இலங்கை பல்கலைக்கழக தமிழ்த்துறை, விஞ்ஞானத்துறை, அரசகரும மொழித் திணைக்களம் ஆகியனவற்றைச்சேர்ந்த பிரதிநிதிகள் குழுவொன்றைக்கூட்டி இது சம்பந்தமாக ஆராய வேண்டும்'.


**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
**சொலுங்கேத் சொலு**
[சிங்களம்]

**மனோஹரா**
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-45
ஜெமினி கணேசன்
லலிதா
நடித்த
**வள்ளியின் செல்வன்**

**REGAL - JAFFNA**
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
Dale Robertson
Martha Hyer
in
**BLOOD ON THE ARROW**

**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA
Daily at
4-45, 7-00, 9-45
**FROM CHINA with LOVE**


# தமிழரசு மத்தியகுழு

## புங்குடுதீவில் இன்று கூடுகிறது

யாழ்ப்பாணம், புதன் தமிழரசுக்கட்சியின் மத்திய குழு கூட்டம் இன்று பிற்பகல் புங்குடுதீவு பெருங்காடு இளைஞர் கழக மண்டபத்தில் ஆரம்பமாகும். இக் கூட்டம் தொடர்ந்து நாளை பிற்பகலும் நடைபெறும்.

இக்கூட்டத்தில் ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வமும், தமிழரசுக்கட்சி எம். பி.க்களும், மத்திய செயற்குழு உறுப்பினர்களும் கலந்துகொள்வார்கள்.

இன்று மாலை புங்குடுதீவு கிழக்கு கலட்டி வரசித்த விநாயகர் கோவில் முன்றலில் அமரர் வி. ஏ. கந்தையாவின் 52-வது வருடாந்த நினைவு தினக் கூட்டம் நடைபெறும். இக் கூட்டத்திற்கு திரு. சா. மதியாபரணம் தலைமை வகிப்பார். தமிழரசு எம் பி.க்களும், ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வமும் இக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றுவார்கள்.

# கணவன் யமனை அழைத்தார், மனைவி உயிரைக் கொடுத்தார்

## இளம் பெண்ணின் பரிதாப முடிவு

யாழ்ப்பாணம், புதன் கடன் தொல்லையால் வாழ்க்கை வெறுத்து உயிரை மாய்த்துக்கொள்ள தீர்மானித்தார் கணவன். நச்சுத்திராவகப் போத்தலை இடுப்பில் செருகிக்கொண்டார். மனைவியுடன் பஸ் நிலையத்திற்கு சென்றார். கணவனுக்கு அடிக்கடி வலிப்பு ஏற்படுவது வழக்கம். பஸ் நிலையத்தில் வலிப்பு ஏற்பட்டு கணவன் மயக்கமடைந்தார். இடுப்பிலிருந்த போத்தல் கீழே விழுந்தது. அதைக் கண்ட மனைவி கணவன் நஞ்சு அருந்திவிட்டதாக தவறுதலாக நினைத்தார். கீழே கிடந்த நச்சுத்திராவகப் போத்தலை எடுத்து மடமடவென்று குடித்தார். இருவரையும் அங்குள்ளவர்கள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர். மனைவி மரணமானார். கணவன் மயக்கம் தெளிந்தார்.

அளவெட்டியைச் சேர்ந்த மாம்பழம் என்ற 22 வயதான இளமங்கையின் மரண விசாரணையின் போது மேற்கண்ட சோகமயமான விபரம் தெரியவந்தது.

மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். இராசநாயகம் மரணவிசாரணை நடத்தினார் இறந்தவரின் கணவனான 23 வயதுள்ள வேலன் முருகன் என்பவர் கலியாணம் முடித்து 3 வருடம் சந்தோஷமாக வாழ்ந்துவந்தாரென்றும், அதன்பின் கடன் கொடுக்கமுடியாமல் கஷ்டப்பட்டாரென்றும், தோட்டத்துக்கு வாங்கிய நச்சுத்திராவகத்தை அரைவாசி பாவித்துவிட்டு வைத்திருந்தாரென்றும், உயிரை மாய்த்துக்கொள்ள முடிவு செய்தபின் மனைவியை பெற்றோரிடம் ஒப்படைத்துவிட்டு, அளவெட்டி பஸ் நிலையத்திற்கு வந்தபோது இச் சம்பவம் நடந்ததாக கூறப்பட்டது.

மரணவிசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. பிரேதபரிசோதனைக்கு மரணவிசாரணை அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

## யாழ்ப்பாண...

[1-ம்பக்கத் தொடர்ச்சி]
பிய இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சங்கத்தின் பிரதிநிதி திரு. இ. இரத்தினசபாபதி குறிப்பிட்டார்.

இலண்டன் 'பினான்சியல் டைம்ஸ்' பத்திரிகையில் இலங்கையைப்பற்றி சிறப்பு இதழ் ஒன்றினை வெளியிடுவதற்காக மூன்று மாதங்களுக்கு முன் லண்டன் சென்று திரும்பியுள்ள திரு. இரத்தினசபாபதி [இணுவை மாறன்] நமது நிருபரிடம் இதனைத் தெரிவித்தார்.

இணுவிலைச் சேர்ந்த இவர் அமெரிக்கா, கனடா, ஜெர்மனி, ஐக்கிய ராச்சியம் ஆகிய நாடுகளிலும் இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களுக்கான வாய்ப்புக்களை ஆராய்ந்துள்ளார். இவர் அதுபற்றி விரைவில் ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவிடம் ஓர் அறிக்கையைச் சமர்ப்பிப்பார்.

# கோப்பாய் கொலை வழக்கில் எதிரிகள் நால்வரும் விடுதலை

யாழ்ப்பாணம், புதன் கோப்பாய் கொலை வழக்கில் எதிரிகள் நால்வரும்விடுதலைசெய்யப்பட்டனர். விசாரணையைத் தொடர விரும்பவில்லையென ஜூரி சபையினர் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதியரசர் எதிரிகளை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

கோப்பாய் கொலை வழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் வி. தென்னக்கோன் முன்னிலையில் நேற்றுக்காலை நான்காவது தினமாக விசாரணை செய்யப்பட்டது. விசாரணை நடுவில் ஜூரிசபையினர், விசாரணையைத் தொடர்ந்து நடத்த விரும்பாததால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இவ்வழக்கில் கோப்பாயில் 66-ம் ஆண்டு ஏப்ரல் 6-ம் தேதி கந்தன் தருமு என்பவரைக் கொலை செய்ததாக, நீலன் சின்னத்தம்பி, சின்னையா, கந்தையா, இராசையா ஆகியோர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

1-ம், 2-ம், 3-ம் எதிரிகள் சார்பில் அட்வகேட் ஜே. ஈ பி. செரிபிம், அட்வகேட் ஆர். கோபாலரத்தினத்தின் உதவியுடனும், புறக்டர் ஆர். விஸ்வநாதன், புறக்டர் கே. குலநாயகம் ஆகியோரின் உதவியுடன் ஆஜரானார். 4-ம் எதிரி சார்பில் அட்வகேட் ஆர். கோபாலரத்தினம், புறக்டர் கே. குலநாயகத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் புறக்டர் சி. பரமசிவம் பிள்ளை நியமிக்கப்பட்டிருந்தார். மூடிக்குரிய தரப்பில் அட்வகேட் திஸா பண்டாரநாயக்கா ஆஜரானார்.

## இரு இரவில்..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
சட்டத்தையும், வீதிஒழுங்கையும் மீறி நடந்ததாக பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். தொடர்ந்து பொலிஸார் வாலிபர்கள்மீது மிகவும் கண்காணிப்பாயிருப்பார்களென சம்பந்தப்பட்ட பொலிஸ்அதிகாரி ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார். [ந. நி.]


**இப்பொழுது நடைபெறுகிறது!**
**கிங்ஸ்லி** [கொட்டாஞ்சேனை] **ஈரோஸ்** [பாம்பன்கடை]
தினசரி பி. ப. 2, மாலை 6-00, இரவு 9-30 மணிவரை
**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
**விஜயா** [மட்டுநகர்] **ஸ்ரீகிருஷ்ணு** [திருமலை] **மொடேர்ன்** [பதுளை]
**மொடேர்ன்** [பண்டாரவளை] **விஜிதா** [ஹட்டன்] **தீவொளி** [நுவரெலியா]
**கல்யாணி** [நாவலப்பிட்டி]
ஆகிய திரைகளில்
தென்னக திரைப்பட வரலாற்றின் மகத்தான வெற்றிச் சித்திரம் ... இது மக்களின் ஒருமித்த தீர்ப்பு!
தாய்க்குலத்தின் இதயத்தைத் தொட்டுவிட்ட தன்னிகரற்ற செல்வம்!!
பத்மஸ்ரீ சிவாஜி கணேசனை சென்ற ஆண்டின் சிறந்த நடிகராக்கியது செல்வம்!!!
நடிக மன்னன் **சிவாஜி கணேசன்,**
நடிக ராணி **கே. ஆர். விஜயா,**
**ரங்கராவ், சகஸ்ரநாமம், வி. நாகையா, நாகேஷ்**



வி. கே. ஆர். பிக்சர்சின்
**செல்வம்**


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

டாக்டர் மனைவி கொலைவழக்கு

# 'ஆர்சனிக்' நஞ்சினால் மரணம் ஏற்பட்டது'

காலி, செவ்வாய் 'அரசாங்க ரசாயன பரிசோதகருடைய அறிக்கையில் 'ஆர்சனிக்' நஞ்சு இறந்தவரான பத்மினியின் உடம்பில் கலந்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனது கருத்துப்படியும் அவரது மரணம் நஞ்சு கலந்ததாலேயே ஏற்பட்டிருக்கலாம் என நம்புகிறேன்'' என்று இலங்கை பல்கலைக் கழக சட்ட சார்பான வைத்திய பேராசிரியர் எச். வி. ஜே. பெர்னாண்டோ காலிமாஜிஸ்டிரேட் திரு. கொலின்மெண்டிஸ் முன்னிலையில் நஞ்சூட்டிக் கொலைசெய்யப்பட்டதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் சாட்சியமளிக்கையில் கூறினார்.

இவ்வழக்கில் திருமதி பத்மினி குலரத்தினவைக் கொல்லச் சதி செய்ததாகவும், கொலை செய்ததாகவும் டாக்டர் டி.ஜி டி.எஸ். குலரத்தின, அவரது தாயார் திருமதி லவுரு குலரத்தின மற்றும் இரு பணிப்பெண்கள் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பேராசிரியர் பெர்னாண்டோ தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது: 1953-ல் நான் இலங்கை பல்கலைக் கழகத்தில் சேர்ந்ததிலிருந்து தொடர்ந்து கடமையாற்றிவருகிறேன்.

இவ்வருடம் ஏப்ரல் 10-ம் திகதி திருமதி பத்மினி குலரத்தனவின் உடம்பை அவரது மகள் அலறி குலரத்தினவும், அவரது சகோதரி திருமதி லாலனி சூரியவன்சாவும் அடையாளம் காட்டினார்கள்.

திருமதி பத்மினி உணவு அருந்திய ஐந்து அல்லது ஐந்தரை மணித்தியாலங்களின் பின் பலதடவைகள் வாந்தியெடுத்தார். வாந்தியெடுத்த அன்று [ஏப்ரல் 9-ம் திகதி] மாலை 5-30 மணிக்கு அவர் மரணமானதாக காலி உதவி பொலிஸ் சுப்ரிண்டன் தெரிவித்தார்

## இந்திய..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
தேச நீதிக்கும்விரோதமான நடவடிக்கை என்று இந்திய வெளிநாட்டு மந்திரி திரு. சாக்ளா கண்டித்திருந்தார்.

பீகிங்கிலுள்ள பாரதத் தூதரகத்தின் புனிதமான உரிமைகளை சீன அரசாங்கம் மீறினால் ஆட்சேபனை தெரிவிப்பதோடும், கோபத்தைக்காட்டுவதோடும் மட்டும் இந்தியா இருந்துவிடாதென்று இந்திய வெளியுறவு மந்திரி திரு. சாக்ளா அறிவித்திருந்தார்.

இந்தியாவின் ஆட்சேபனைகளை அசட்டைசெய்துவிட்டு இந்திய தூதரகத்தின் 2வ-து காரியதரிசியை பலவந்தப்படுத்தினாலும், விசாரணைக்குட்படுத்தினாலும் இந்தியா என்ன செய்யவேண்டும் என்பதுபற்றி ஆலோசிக்கப்பட்டது.

இந்திய தூதரகத்துக்குள் இருக்கும் திரு. ரகுநாத்தை சீனர்கள் வெளியில் இழுத்து வந்து பலவந்த விசாரணைக்கு உட்படுத்தக்கூடும் என்றும், சீனாவின் குற்றச்சாட்டுகள் உள்நோக்கமும் சூதும் நிறைந்த சூழ்ச்சித் திட்டம் என்றும் இந்தியாவில் கருதப்பட்டது. இந்திய பார்லிமெண்டில் இன்று சீனாவின் நடவடிக்கைபற்றி விவரிக்கப்பட்டது. சீனாவுடனான ராஜிய உறவுகளை இந்தியா ரத்துச் செய்துகொள்ளவேண்டுமென்று அங்கத்தவர்கள் யோசனை கூறினார்கள்.

[முன்வந்த செய்திகள் 3-ம் பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org